<u>**சார்பு நீதிமன்றம், அவிநாசி**</u>

<u>**COS – 25/2023**</u>

நாள் 10.08.2026

DW1 – முருகேசன்

த/பெ – ராமன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of August 2026.**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நான் 10-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியும். நான் தமிழில் தான் கையொப்பம் போடுவேன். வாதி வங்கி கிளையில் நான் வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆகிய ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். எனக்கு காலில் வெரிகோஸ் நோய் உள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் வாதி வங்கியில் பெற்ற கடனை எனக்கு வெரிகோஸ் நோய் உள்ளதானாலேயே அந்த கடனை தள்ளுபடி செய்ய கோருவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதி வங்கியிலிருந்து முகவர்கள் வந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி வங்கி தேசியமயமாக்கப்பட்ட வங்கி என்பதால் அங்கு முகவர்கள் என்று யாரும் கிடையாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக சமரச மையத்திலிருந்து எனக்கு வந்த அழைப்பாணையின் பேரில் நான் ஆஜராகததற்கு சட்டப்படியான காரணம் ஏதேனும் உண்டா? என்றால் எனக்கு சம்மனே வரவில்லை.

2. நான் வாதி வங்கியிடமிருந்து பெற்ற கடனை வாதி வங்கி என்னிடம் பலமுறை நேரில் கேட்டும் நான் கடனை செலுத்த முன்வரவில்லை என்றும், அதேபோல், சமரச மையத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரிலும் நான் ஆஜராக முன்வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 ஆவணங்கள் எதுவும் தட்டச்சு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால், நான் வாங்கிய கடனை வட்டியும் அசலும் சேர்த்து வாதி வங்கிக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.08.10 15:03:50 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**